
# தடம் THADAM

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி 2011

J/CHAVAKACHCHERI HINDU COLLEGE CHAVAKACHCHERI Sep-December **VOLUME 4 ISSUE 3**


## எமது கல்லூரிக்குப் புதியபேருந்து வழங்கல் நிகழ்வு.



எமது கல்லூரிக்கென புதிய பேருந்து வண்டியொன்று (40 லட்சம் ரூபா பெறுமதியானது) TATA Star Bus) கல்லூரி நிறுவுநர் அமரர் வி.தாமோதரம்பிள்ளை அவர்களின் வழித் தோன்றலான திரு சரா தாமோதரம்பிள்ளை அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. பேருந்துக்கான ஆவணங்களைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த 23.09.2011 வெள்ளிக் கிழமை காலை 8.00 மணியளவில் எமது கல்லூரி முதல்வர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு கா.சிவஞானசுந்தரம் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் திரு சரா.தாமோதரம்பிள்ளை அவர்கள் பேருந்துக்கான ஆவணங்களைக் கல்லூரி முதல்வர் அவர்களிடம் சம்பிரதாய பூர்வமாகக் கையளித்தார். வைத்தியகலாநிதி த.குகதாசன் (வைத்திய அத்தியட்சகர் - ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி) பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு யோ.ஜெயக்குமார் (உதவிப் பதிவாளர், யாழ் பல்கலைக்கழகம்) ஆசிரிய சகோதரத்துவச் செயலாளர் திரு ந.ஸ்ரீகரன், வலயக் கல்விப் பணிப்பாளர் திரு கு.பிறேமகாந்தன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு க.சிவானந்தம்; தாபகர் குடும்ப உறுப்பினர் திரு து.சுகுமார், சாவகச்சேரி வணிகர் கழகத்தலைவர் திரு ஸ்ரீ.பிரகாஷ் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

மாணவர்களின் இணைபாடவிதானச் செயற்பாடுகளின் போது போக்குவரத்துச் செலவீனம் மிகவும் அதிகளவாகக் காணப்படுவதுடன் அதனை ஈடு செய்வதில் பெரும் சிரமங்களை இதுவரைகாலமும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. பேருந்து வழங்கப்பட்டுள்ளதால் இத்தகைய செலவீனங்களைக் குறைத்துக் கொள்ள முடியும் என்பதும், இதனை மிகவும் சிறந்த முறையில் பராமரிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் இங்கு உரையாற்றியோர் குறிப்பிட்டனர். மாணவர்கள் சார்பாக சிரேஷ்ட மாணவ முதல்வன் செல்வன் சி.சசிதரன் உரையாற்றினார். பிரதி அதிபர் திரு ந.பாலச்சந்திரன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.



## பரிசில் நாள் - 2011



வருடந்தோறும் இடம்பெறும் முக்கியமான நிகழ்வான பரிசில் நாள் நிகழ்வு இவ்வருடமும் கடந்த 27.09.2011 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி முதல்வர் தலைமையில் இடம்பெற்றது.

சிரேஷ்ட மாணவ தலைவி செல்வி லோ.மயூரதியின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக திரு இ.இளங்கோவன் (கௌரவ ஆளுநரின் செயலாளர், ஆளுநர் செயலகம், வடமாகாணம் பதில் செயலாளர் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்) அவர்கள் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு கு.பிறேமகாந்தன் அவர்களும், கௌரவ விருந்தினராக திருமதி வாணி கலாபன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்கம், ஐக்கிய இராச்சியக் கிளை) அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

முதன்மை விருந்தினர் அவர்கள் தமது உரையிலே மிகச் சிறப்புற ஒழுங்கமைக்கப்பட்ட பரிசில் நாள் நிகழ்வு எனப் பாராட்டியதுடன், மாணவர்கள் மிகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் பல்துறையிலும் சிறப்புடையவர்களாகவும் உருவாக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். கணித விஞ்ஞான துறைகளுக்கான பல்கலைக்கழக அனுமதி பெறுவோர் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் தமது உரையிலே யாழ்ப்பாணக் குடாநாட்டிலே மிகச் சிறந்த கல்விமான்களையும், ல்துறைவல்லுநர்களையும் உருவாக்கியது ச்சேரி இந்துக் கல்லூரி என்றும், மீண்டும் அந்த நிலையை இங்கு உருவாக்க அனைத்துத் தரப்பினரும் முயற்சியெடுக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.



பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் ஐக்கிய இராச்சியக் கிளையின் உறுப்பினரும் கௌரவ விருந்தினருமாகிய திருமதி வாணி கலாபன் அவர்கள் தமது உரையிலே கல்லூரியில் தான் கற்ற பசுமையான நாட்களை நினைவுகூர்ந்ததுடன் கற்பித்த ஆசிரியர்களின் வழிகாட்டலின் உன்னதமான தன்மையினையும் விதந்து கூறினார். 28.07.2011 அன்று ஐக்கிய இராச்சியத்தில் இடம்பெற்ற பழைய மாணவர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்க செயலாளர் திரு யோ.ஜெயக்குமார் அவர்கள் கலந்து கொண்டமை பற்றிக் குறிப்பிட்டதுடன் பழைய மாணவர் ஆசிரிய சங்க உறுப்பினர்கள் ஒவ்வொரு மாதமும் ஐந்து பவுன்ஸ் இச் சங்கத்திற்கு செலுத்த வேண்டுமெனவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

முன்னாள் அதிபர் திரு இ.கயிலைநாதன், உப அதிபர் திரு ச.சபாரத்தினம், பிரதி அதிபர் திரு ம. அருணாசலம், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் அயற் பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்வி அலவலக உத்தியோகத்தர்கள் இந்நிகழ்வில் கலந்து சிற்பபித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆசிரியர் தினம் - 2011

உலக ஆசிரியர் தினத்தைமுன்னிட்டு எமது கல்லூரியில் 05.10.2011 அன்ற ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது. மாணவர் முதல்வர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட இவ்விழாவிற்கு முன்னாள் உப அதிபர் திரு க.லோகநாதன் அவர்கள் முதன்மை

விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். அடுத்த ஆசிரியர் தினத்திற்கு முன்னர் ஓய்வு பெறவுள்ள மூத்த ஆசிரியரான திரு த.பாலகிருஷ்ணன் அண்மையில் ஓய்வு பெற்ற இசை ஆசிரியை திருமதி க.குமாரசாமி ஆகியோருக்கு நினைவுக் கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.



மாணவர்களின் பாமாலைகளாலும், பூமாலைகளாலும் ஆசிரியர்கள் கௌரவிக்கப் பட்டனர். மாணவர்களதும் ஆசிரியர்களதும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

06.10.2011 அன்று பிற்பகல் 1 மணிக்கு வலய மட்ட ஆசிரியர் தினநிகழ்வு எமது கல்லூரிப் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

## வாணிவிழாவும் போட்டி நிகழ்வுகளும்

எமது கல்லூரியில் ஒவ்வொரு வருடமும் வாணி விழா சிறப்புற நடைபெற்று வருகிறது. அதனையொட்டிய கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல், சமய அறிவுப் போட்டி என்பனவும் தவறாது இடம்பெற்று வருகின்றன. இந்தவகையில் இம்முறையும் 28.09.2011 - 06.10.2011 வரையும் நடைபெற்ற நவராத்திரி பூசை நிகழ்வுகள் சிறப்புற இடம்பெற்றதுடன் 05.10.2011 அன்று காலை



வாணிவிழா மாணவர்களின் கலை நிகழ்வுடன் சிறப்பாக இடம்பெற்றது.

நவராத்திரியை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்க்கான சான்றிதழ்கள், பரிசில்கள் என்பன வழங்கப்பட்டன.

**சமய அறிவுப் போட்டி (தரம் 6-7)**

| | | |
|---|---|---|
| அ.கீர்த்தனன் | - 6A | 1ம் இடம் |
| நா.நவீன்சங்கர் | - 7C | 2ம் இடம் |
| தே.கஜவதனன் | - 7C | 3ம் இடம் |
| **தரம் 8 - 9** | | |
| சி.கார்த்திகா | - 9E | 1ம் இடம் |
| கு.கௌசிகா | - 9D | 2ம் இடம் |
| த.இந்துஜா | - 9D | 3ம் இடம் |
| **தரம் 10 - 11** | | |
| பூ.பிரியா | - 11D | 1ம் இடம் |
| ஸ்ரீ.துளசிகரன் | - 11C | 2ம் இடம் |
| யோ.கபீர்த்தனா | - 11E | 3ம் இடம் |
| **தரம் 12 - 13** | | |
| சி.துஸ்யங்கா | | 1ம் இடம் |
| த.பூமா | | 2ம் இடம் |
| கு.பவிதா | | 3ம் இடம் |

## மனமகிழ்நாள் 2011

மனமகிழ்நாள் எமது கல்லூரியில் 20.09.2011 அன்று கொண்டாடப்பட்டது. மாணவர்கள் மிக்க மகிழ்ச்சியுடனும் ஈடுபாடுடனும் பயனுள்ள முறையில் தம் மகிழ்வை வெளிப்படுத்தினர். ஒழுங்கான முறையில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட மனமகிழ் நாள் மாணவர் களின் உள்ளத்தில் புத்துணர்ச் சியையும் ஊக்கத்தையும் எற்படுத்திய நிகழ்வாக அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தடம் வெளியீட்டு நிகழ்வு

இரண்டாந்தவணைக்கான தடம் வெளியீட்டு நிகழ்வு கடந்த 19.09.2011 அன்று கல்லூரிப் பிரதான மண்டபத்தில் கல்லூரி முதல்வர் தலைமையில் இடம்பெற்றது. தென்மராட்சிக்க ல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு S.மகேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து தடம் செய்தி ஏட்டை வெளியிட்டு வைத்து உரையாற்றினார். தொடர்ச்சியாக வெளியிடப்படுகின்ற சிறப்புக் குறித்தும் கல்லூரியின் முக்கியமான ஆவணமாக அமைந்துள்ளது என்பது பற்றியும் தமது உரைவியல் குறிப்பிட்டார். பிரதி அதிபர் திரு ந.பாலச்சந்திரன் அவர்கள் மாணவர்கள் தடம் செய்தி ஏட்டைப் பெற்றுப் பாதுகாக்க வேண்டி யதன் முக்கியத்துவம்

பற்றிக் குறிப்பிட்டார். முதல்வர் அவர்கள் தொடர்ச்சியாக தடத்தினை வெளிக்கொணர ஊக்கத்துடன் செயற்படும் குழுவினருக்கு பாராட்டைத் தெரிவித்தார். நான்காவது ஆண்டுக்கான இரண்டாவது தடம் இதுவாகும்.

## பணி சிறக்க வாழ்த்துகின்றோம்

**பிரதி அதிபர், உபஅதிபர், பகுதித்தலைவர் நியமனம்.**

எமது கல்லூரியின் பகுதித்தலைவராகப் பணியாற்றி ஆசிரியை திருமதி செல்வராணி செல்வராஜா அவர்கள் 01.09.2011 முதல் எமது கல்லூரியின் பிரதி அதிபராகப் (கல்வி அபிவிருத்தி) பதவி உயர்வு பெற்றுள்ளார். அர்ப்பணிப்பான அவரது சேவையில் எமது கல்லூரி மேலும் சிறப்புற்று விளங்கும் என்பதில் நாம் மிக்க மகிழ்வடை கின்றோம். புதிய பிரதி அதிபர் அவர்களது பணி சிறக்க தடம் செய்தி ஏட்டினூடாக வாழ்த்துகின்றோம்.



எமது கல்லூரியில் பகுதித்தலைவராகப் பணியாற்றிய திரு தபாலசண்முகநாதன் அவர்கள் 01.09.2011 முதல் கல்லூரியின் உப அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். புதிய உப அதிபர் அவர்களது அர்ப்பணிப்பான பணியில் எமது கல்லூரி மேலும் சிறப்படைய வேண்டுமென பெருமகிழ்வுடன் வாழ்த்து கின்றோம்.



எமது கல்லூரியின் ஆசிரியர் திரு ஓ.விஜயரட்ணம் அவர்கள் 01.09.2011 முதல் பகுதித்தலை வராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். அவரது அர்ப் பணிப்பான பணி மேலும் சிறக்க தடம் செய்தி ஏட்டினூடாக வாழ்த்துவதில் பெருமகிழ்வ டைகின்றோம்.





எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி க.ஸ்ரீதரன் அவர்கள் 01.09.2011 முதல் பகுதித்தலைவராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். இவரது பணி மேன்மேலும் சிறப்புற்று எமது கல்லூரிக்கு வலுச்சேர்க்க வேண்டுமென தடம் செய்தி ஏட்டினூடாக மிக்க மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

## மாணவர் தலைவர் – சின்னஞ் சூட்டும் நிகழ்வு

இவ்வாண்டு எமது கல்லூரியின் புதிய மாணவர் தலைவர் தெரிவு இடம்பெற்று 21.10.2011 அன்று சின்னஞ்சூட்டும் நிகழ்வு சிறப்புற இடம்பெற்றது. சிரேஷ்ட மாணவ தலைவனாக செல்வன் சி.சசிதரனும், சிரேஷ்ட மாணவ தலைவியாக செல்வி லோ.மயூரதியும் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

## சத்தியமே ஜெயம் குறும்படம் வெளியீட்டு விழா



எமது கல்லூரி ஆசிரியர் திரு கு.ஜோதிரட்ணராஜா அவர்களின் நெறியாள் கையில் சத்தியமே ஜெயம் என்ற குறுந்திரைப்பட வெளியீடு கடந்த 23.10.2011 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி முதல்வர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதிபர் அவர்கள் தமது உரையில் இப்பணியில் முன்னின்றுழைத்த ஆசிரியரைப் பாராட்டினார்.

முதன்மை விருந்தினராக யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினராக திரு முத்து இராதாகிருஷ்ணன் (மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்) அவர்களும், கௌரவ விருந்தினராக திருமதி கயல்விழி சூரியகுமார் (இசை ஆசிரியை,

வவுனியா றம்பைக்குளம் மகளிர் கல்லூரி) அவர்களும் திரு பொன் ஸ்ரீவாமதேவன் (முன்னாள் இந்துக் கல்லூரி ஆசிரியர், யாழ் பல்கலைக்கழக இசை விரிவுரையாளர) அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

முதன்மை விருந்தினர் அவர்கள் குறும்பட இறுவட்டை வெளியீடு செய்து வைத்து உரையாற்றினார். முதற்பிரதியை திரு சீவரட்ணடம் கோபிதாஸ் (எலைற் என்ரரைமன், கண்டி வீதி நுணாவில்) அவர்கள் பெற்றுக் கொண்டார். முதன்மை விருந்தினர் தமது உரையிலே இவ்வாறான குறும்படம் ஒன்றைத் தயாரிக்கும் போது ஏற்படும் இடர்பாடுகள் பற்றியும் இதற்கான செலவு அதிகமாகும் என்பது பற்றியும் குறிப்பிட்டதுடன் இதில் நடித்த மாணவர்களின் சிறந்த நடிப்புத் திறனைப் பாராட்டினார். இத்தயாரிப்பில் முன்னின்ற ஆசிரியரையும் பாராட்டினார்.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு முத்து இராதாகிருஷ்ணன் அவர்கள் உரையாற்றும் போது மிகவும் சிரமமான விடயத்தை முயற்சியுடன் முன்னின்று செயற்படுத்தியமை பாராட்டப்பட வேண்டியது எனக் குறிப்பிட்டார். அத்துடன் தமிழ் மொழித்தினப் போட்டிகளில் வெற்றி தோல்வி என்பதைவிட இவ்வாறான நாடகமொன்றை மேடையேற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்பட வேண்டியது முக்கியமான விடயமாகும் எனவும் குறிப்பிட்டார்.

மற்றும் கௌரவ விருந்தினர்களின் உரையும் இடம்பெற்றது. சிறப்புப் பிரதிகள் வழங்கும் நிகழ்வும், குறுந்திரைப்படக் காட்சியும் இடம்பெற்றது. திரு கு.ஜோதிரட்ணராஜா ஆசிரியர் அவர்களின் ஏற்புரையில் இத்திரைப்படத்திற்கான தயாரிப்பில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளும் இன்னமும் நிதி பற்றாக் குறையாகவுள் ளதாகவும் குறிப்பிட்டார். இந்தக் குறும்பட வெளியீட்டில் பங்கு கொண்டுழைத்த இசை வாத்தியக் கலைஞர்கள் ஆசிரியர் கு.ஜோதிரட்ணராஜா ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். ஒளிப்பட இயக்குநர் திரு தி.தர்மலிங்கம் அவர்களும் கௌரவிக்கப்பட்டார்.

எமது கல்லூரி ஆசிரியர் திரு செல்வரமணன் அவர்களின் நன்றியுரையுடன் விழா நிறைவு பெற்றது.

## நூல்கள் கொள்வனவு

நூலகத்திற்கான நூல்கள் கொள்வனவு செய்வதற்கென மத்திய அரசினால் ரூபா 28,472 நிதி வழங்கப்பட்டது. இந்த நிதியில் நூலகத்திற்கான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

## பழைய மாணவர் சங்கச் செயலாளர் ஐக்கிய இராச்சியத்திற்குப் பயணம்

எமது கல்லூரிப் பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு யோ.ஜெயக்குமார் அவர்கள் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள எமது கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்க கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அண்மையில் ஐக்கியராச்சியம் சென்று அங்கு நடைபெற்ற ஒன்றுகூடலில் பங்குகொண்டு எமது கல்லூரி அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார். ஆக்கபூர்வமான கருத்துக்கள் அங்கு முன்வைக்கப்பட்டதுடன் அவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## நோயின்றி வாழ்வோம்

நீரிழிவு நோய் பற்றியும், அந்நோயிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் பற்றியும் நீரிழிவு வாரத்தை முன்னிட்டு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களால் நடத்தப்பட்ட கருத்தரங்கில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. காட்சிப் படங்களுடனும் கருத்துக்களுடனும் சிறப்பான முறையில் இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இன்றைய காலத்தின் தேவை கருதிய சிறந்த கருத்தரங்காக இது அமைந்திருந்தது.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம்

பாடசாலை அபிவிருத்தி தொடர்பாக பெற்றோருடனான சந்திப்பு நிகழ்வொன்று 12.11.2011 அன்று பி.ப 2.30 மணிக்கு எமது கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், பொது சுகாதார பரிசோதகர், மருத்துவமாது, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய

கலாநிதி குகதாசன் கல்லூரி ஆசிரியர்கள், 500 இற்கும் அதிகமான பெற்றோர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.


கல்லூரி முதல்வர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இன்றைய மாணவர் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்தும் பெற்றோர் அவற்றுக்கான தீர்வு காணும் நடைமுறைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. கல்லூரியில் ஏற்படும் செலவீனங்கள் குறித்தும் அவற்றை ஈடு செய்வதற்கான வழிமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

## சேவை நயப்பும் பிரிவுபசாரமும்



எமது கல்லூரியில் 03.01.1994 முதல் 15.09.2011 வரை இசை ஆசிரியராகக் கடமை யாற்றி ஓய்வுப் பெற்றுச் சென்றுள்ள ஆசிரியை திருமதி கமலேஸ்வரி குமாரசாமி அவர்களின் பிரிவுபசார வைபவம் எமது கல்லூரி பிரதான மண்டபத்தில் 20.09.2011 அன்று நடைபெற்றது. பிரதான மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் மாணவர்கள் பாமாலைகளாலும் பூமாலைகளாலும் ஆசிரியை அவர்களின் சேவையைப் போற்றினர்.

திருமதி க.குமாரசாமி ஆசிரியை அவர்கள் எமது கல்லூரி மாணவர்களின் இசை ஆற்றலை வளர்ப்பதில் அரும்பாடுபட்டு உழைத்தவர். பாடத்தோடு மட்டும் நில்லாது மாணவரின் ஒழுக்கம், ஒழுங்கு என்பவற்றிலும் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டவர். தான் கற்ற பாடசாலையில் பணியாற்றுகின்ற பேறு பெற்றவர். தமிழ் மொழித் தினப் போட்டிகளில் மாணவரை பங்குபற்றச் செய்வதிலும், அவர்களது திறமைகளை இனம் கண்டு வளர்த்தெடுப்பதிலும் மிகச் சிறந்த முறையில் பணியாற்றியவர். மாணவர் களிடம் கண்டிப்புடன் அன்பையும் ஊட்டி அரவணைத்து கல்வி புகட்டியவர். சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் பெண்கள் அணியின் பொறுப்பாசிரியராகப் பணியாற்றியவர். ஆசிரிய ரோடு அன்புடன் சிநேகபூர்வமாய் பழகுவதிலும், பிறர் துன்பத்தில் உடன் சென்று உதவிகள் செய்கின்ற மனித நேயம் மிக்கவ ராகவும் ஆசிரியர் அவர்கள் விளங்கினார். தன்னுடைய பிள்ளைகளையும் நல்லதோர் நிலைக்கு உயர்த்தியதுடன் தான் கற்பித்த மாணவர்களும் உயர்வு பெற வழிகாட்டியவர்.



வேறு பல பாடசாலைகளில் கற்பித்த போதிலும் எமது கல்லூரியிலேதான் 17 வருடங்கள் பணி புரிந்து எமது கல்லூரியின் வளர்ச்சியிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆசிரியர் அவர்களது ஓய்வு காலம் மகிழ்ச்சியாகவும் சிறப்பாகவும் அமைய வேண்டும் என இதய பூர்வமாக இறையாசியை வேண்டுகின்றோம்.

20.09.2011 அன்று பிற்பகல் 1.30 மணியளவில் ஆசிரிய சகோதரத்துவத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பிரிவுபசார வைபவமும் மதிய போசனமும் சிறப்பான முறையில் நடைபெற்றது. அதிபர், ஆசிரியர்கள் ஆசிரியை அவர்களின் சேவையை விதந்து பாராட்டினர். ஆசிரியர் திரு கு.ஜோதிரட்ணராஜா அவர்கள் பாமாலையால் ஆசிரியர் அவர்களை பாராட்டினார். அதிபர் அவர்கள் தமது உரையிலே "கடமையிலே மிகவும் கருத்துடன் பணியாற்றியவர் என்றும் இசைத் துறையில் மாணவருக்குப் பயிற்சியளித்து சிறந்த முறையிலே செயற்பட்டவர்' என்றும் குறிப்பிட்டார். ஆசிரிய சகோதரத்துவத்தின் அன்பளிப்பும் வாழ்த்துப்பாமாலையும் வழங்கப்பட்டு ஆசிரியர் அவர்கள் கௌரவிக்கப்பட்டார்.

# போட்டிகள் சாதனைகள்

அகில இலங்கை இந்துமன்றம் நடத்திய விபுலானந்தர் நினைவுதினக் கட்டுரைப் போட்டியில் எமது கல்லூரி மாணவி செல்வி மு.தீபிகா (12A3) ஆறுதல் பரிசு பெற்றுள்ளார்.

வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடத்திய மாகாண மட்ட விஞ்ஞான விநாடி வினாப் போட்டியில் (தமிழ் மொழி மூலம்) எமது கல்லூரி மாணவி சி.கார்த்திகா (தரம் 9) மூன்றாமிடம் பெற்றுள்ளார்.

வடமாகாணக் கல்வித் திணைக்களமும் GTZ நிறுவனமும் இணைந்து நடந்து நடத்திய

சுவரொட்டி, கவிதைப் போட்டிகளில் எமது கல்லூரி மணாவர்கள் பரிசில் பெற்றுள்ளனர்.

கவிதை பி.பிறேமிஷா பிரிவு 3 1ம் இடம்

சுவரொட்டி வி.நயனன் பிரிவு 4 2ம் இடம்

### கண்ணிவெடி விழிப்புணர்வுச் சித்திரப் போட்டி

பிரவு I

| | |
|---|---|
| கு.பூர்ணிமா | 3ம் இடம் |
| பிரிவு IV | |
| யோ.சிந்துஷன் | 1ம் இடம் |
| ம.வினிஸ்குமார் | 2ம் இடம் |
| ம.றஜிகா | 3ம் இடம் |
| மோ.பிரசாந் | 5ம் இடம் |

இப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர் களையும், அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

### பன்மைத்துவக் கலாசாரத்தின் ஊடாக சமாதானம்

(சித்திர, கவிதைப் போட்டிகள்)
கோட்ட, வலய மட்டம்

சித்திரப் போட்டி

வெற்றி பெற்றோர் விபரம்

| | |
|---|---|
| க.பூர்ணிமா - தரம் 6 | 2ம் இடம் |
| கி.கஜானந் - தரம் 9 | 2ம் இடம் |
| வி.நயனன் - தரம் 11 | 1ம் இடம் |
| வி.சரவணபவன் - தரம் 13 | 1ம் இடம் |
| **கவிதைப் போட்டி** | |
| பி.பிறேமிஷா - தரம் 11 | 1ம் இடம் |
| நா.கோதண்ஜா - தரம் 11 | 2ம் இடம் |
| ந.சன்சனா - தரம் 12 | 2ம் இடம் |

### பயிர் வளர்ப்போம் தேசத்தை முன்னேற்றுவோம் வீட்டுத் தோட்டப் போட்டி – 2011

பாடசாலைகளுக்கிடையேயான வீட்டுத் தோட்டப் போட்டியில் எமது கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இதில் பங்கு கொண்ட மாணவர்களையும் விவசாயத் துறைப் பொறுப்பாசிரியர் திரு நந்தகுமார் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

## விளையாட்டு

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட றக்பி களியாட்ட நிகழ்வில் வடமாகாணம் சார்பாகப் பங்குபற்றிய ஒரே ஒரு அணியாக எமது கல்லூரியின் 12 வயதுப் பிரிவு இரு அணிகள் கின்னஸ் சாதனை நிகழ்வுக்காகப் பங்கு பற்றியுள்ளனர்.

தென்மராட்சி வலய மட்டத்தில் நடைபெற்ற 12 வயதுக்குட்பட்ட ஆண் பெண்களுக்கான தனியாள் சதுரங்கப் போட்டியில் எமது கல்லூரி மாணவர்களான

அ.கீர்த்தனன் - 6A

ச.சங்கவி - 6D ஆகிய இருவரும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

வலய மட்ட உதைபந்தாட்டப் போட்டி

18 வயது ஆண் 3ம் இடம்

16 வயது ஆண் 3ம் இடம்

18 வயது பெண் 1ம் இடம்

முன்னாள் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அமரர் க.சிவகோசாரியார் ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டியில் வலய மட்டத்தில் எமது கல்லூரி 14 வயது ஆண் பெண் அணிகள் 1ம் இடம் பெற்றுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர் களையும் பாராட்டுகின்றோம். மேன்மேலும் உயர்வுபெற வாழ்த்துகின்றோம்.

## வாசிப்பு மாதம்

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலையில் கட்டுரை, கவிதை, பொது அறிவு சஞ்சிகை ஆக்கம் முதலிய போட்டிகள் நடத்தப்பட்டு மாணவர் தெரிவு இடம்பெற்றது.

கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டியில் தரம் 8B, தரம் 11E ஆகிய வகுப்புகளின் கையெழுத்துச் சஞ்சிகைகள் முதலாமிடத்தை பெற்றுக் கொண்டன. இந்த ஆக்க முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்ற மாணவர்களையும் நெறிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

### அரச ஊழியர்க்கான ஆக்கத்திறன் போட்டி – 2011

அரச ஊழியர்க்கான ஆக்கத்திறன் போட்டியில் பங்குபற்றி கவிதை ஆக்கத்திற்காக தேசிய நிலையில் ஆறாவது பரிசை எமது கல்லூரி



ஆசிரியை திருமதி வி.மகேந்திரன் பெற்றுள்ளார். கலை கலாசார அமைச்சர் கௌரவ D.P.எக்கநாயக்க தலைமையில் ஜோன் டீசில்வா ஞாபகார்த்த அரங்கில் கடந்த 27.12.2011

அன்று இவருக்கான பரிசில் வழங்கப்பட்டது. நாமும் பாராட்டுகின்றோம்.

**உள்ளகப் பயிற்சிக்காக வருகை தந்த ஆசிரியர்கள்**

செல்வி S.சோமகாந்தி - ஆங்கிலம்
செல்வி A.தாரணி - இசை
செல்வி S.தீபனா - நடனம்
செல்வி K.சசிரேகா - கணிதம்
செல்வி S.மீரா - விஞ்ஞானம்
திரு K.கஜந்தன் - கணிதம்

**எமது கல்லூரியில் புதிதாக இணைந்து கொண்ட ஆசிரியர்கள்**



| | |
|---|---|
| செல்வி.S.துஷாந் | (B.F.A (Music) |
| செல்வி T.றோமிளா | (B.F.A(Music) |
| திருமதி S.கவிதா | (B.F.A (Music) |
| திருமதி K.பார்த்தீபன் | (Dip.in Teaching (Science) |
| திருமதி V.சிவராஜா | (Home Science (Trd) |
| திரு M.ரஞ்சித்குமார் | (B.F.A (Art) |
| திரு K.சுதாகரன் | (BSc with Edu) |

## பௌதிகவள விருத்தி

பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பேருந்தினை பாதுகாப்பான முறையில் பேணுவதற்கான தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் கட்டடத்திற்கான நிதியில் ஒரு பகுதியினை பாடசாலை ஆசிரியர்களும் வழங்கி உள்ளனர். ஆசிரியர் திரு த.இரகுலேசன் 20,000/-வை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். திரு ப.ஜெகசீலன் ஆசிரியர் 5000/- வை வழங்கியுள்ளார். ஏனைய அனைத்து ஆசிரியர்களும் 1000/- வீதம் வழங்கியுள்ளனர். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் நிதி உதவியுடனும் இக் கட்டிடம் அமைக்கப்பட்டு பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

K,L மண்டபங்களில் ஒரு பக்க அரைச் சுவர் அமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டுள்ளது.

சமையலறை அமைக்கப்பட்டு பூர்த்தியாக் கப்பட்டுள்ளது.

மைதானத்தில் கிரிக்கெட் பயிற்சிக்கான Net Practice (வலைப்பயிற்சி) தளம் அமைக்கப்பட்டுள்ளது.

## கருவும் காட்சியும்..

சித்திர பாட அடைவை மேம்படுத்தும் நோக்குடனும் சித்திரக் கலையில் மாணவர்க்கு ஈடுபாட்டை ஏற்படுத்தும் முகமாகவும் எமது கல்லூரிச் சித்திர ஆசிரியர்கள் சிறந்ததோர் போட்டி நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகஞ் செய்து நடத்தி வருகின்றனர். கருவும் காட்சியும் என்ற இந்த ஓவியப் போட்டித் தொடர் தரம் 6 - 13 வரையான மாணவர்க்குரியதாக நடைபெற்று வருகின்றது. இதற்கான சான்றிதழ்களும் இருவாரங்களுக்கு ஒருமுறை மாணவர்க்கு வழங்கப்படுகின்றது.

போட்டி இல : VI
தலைப்பு : வயல் அறுவடை
பிரிவு I
1ம் இடம் ஆ.நிஜானந் 2ம் இடம் உதயகாந்தன்
3ம் இடம் மோ.அகிலன்
பிரிவு II
1ம் இடம் - ஆ.கஜானந்த் 2ம் இடம் - ம.கீதனந்த்
3ம் இடம் - யோ.மதுஷன்

போட்டி இல :VII (2011 - 07)
பிரிவு I
1ம் இடம் - ஆ.சிஜானந் 2ம் இடம் - ஆ.ஷாரூபன்
3ம் இடம் - தெ.பிரணவன்
பிரிவு II
1ம் இடம் - ஆ.கஜானந் 2ம் இடம் - து.யதுர்ஷன்
3ம் இடம் - சி.சிவஜன்

போட்டி இல VIII (2011 - 08)
தலைப்பு: இயற்கைக் காட்சி
பிரிவு I
1ம் இடம் - ஆ.நிஜானந்தன் 2ம் இடம் - ஆ.ஷாறூபன்
3ம் இடம் - த.நிறஞ்சன்
பிரிவு II
1ம் இடம் - கு.மகிழ்னன் 2ம் இடம் - சி.சவஜன்
3ம் இடம் - ஆ.கஜானந்
பிரிவு II
1ம் இடம் - க.பிரியங்கன் 2ம் இடம் - ஆ.சிஜானந்
பிரிவு IV
1ம் இடம் - யோ.இந்துஷன் 2ம் இடம் - ம.வனித்குமார்

போட்டி IX (2011.09)
பிரிவு I
1ம் இடம் - ஆ.நிஜானந் 2ம் இடம் - கு.ரிஷிகேசன்
3ம் இடம் - ச.சாஜன்
பிரிவு II
1ம் இடம் - ஆ.கஜானந் 2ம் இடம் - சி.சிவஜன்
3ம் இடம் - சு.குகரதன்
பிரிவு III
1ம் இடம் - ஆ.சிஜானந் 2ம் இடம் - க.பிரியங்கன்
3ம் இடம் - கு.சம்பத்குமார்
பிரிவு IV
1ம் இடம் - ம.பிரசாந் 2ம் இடம் - ம.ரஜீகா

## வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரி ஆசிரியர் திரு வே.உதயகுமார் அவர்கள் முதுகலை மாணி (தமிழ்) பட்டம் பெற்றுள்ளார். சிறப்புச் சித்தி பெற்ற எமது கல்லூரி ஆசிரியர் அவர்களை மேலும் உயர்வு பெற வேண்டுனெ தடம் செய்தியேட்டினூடாக வாழ்த்துகின்றோம்.

## எமது கல்லூரிக்கு முச்சக்கரவண்டி அன்பளிப்பு

யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவஞானம் சிறிதரன் அவர்கள் தனது சொந்த நிதியில் இருந்து எமது கல்லூரிக்கென முச்சக்கர வண்டி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.



## கண்ணீர் நினைவுகள் .....

அமரர்

திருமதி புஸ்பா கணேசலிங்கம்

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் முன்னாள் கல்விப் பணிப்பாளரும், எமது கல்லூரி வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவருமான திருமதி புஸ்பா கணேசலிங்கம் அவர்களின் மறைவு எமது கல்லூரிக்கு மட்டுமல்ல தென்மராட்சிச் சமூகத்திற்கே ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் மறைவினால் நாம் மிக்க துயர்வடைவதுடன் ஆத்ம அமைதிக்காக ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

## கண்ணீர் நினைவுகள் .....



அமரர் திரு சி.தயாபரன்

கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையின் அதிபரும், எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியருமாகிய அமரர் தயாபரன் அவர்களின் திடீர் மறைவினால் நாம் மிக்க துயரடைகின்றோம். சிறந்த கல்விப் பணியாளன் ஒருவரின் இழப்பு எம் கல்விச் சமூகத்திற்கு ஈடு செய்ய முடியாத ஒன்றாகும். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

## All Island Inter-School Chemistry Essay Competition 2011

Our school G.C.E A/L student Ms.Thereka Balakrishnan won the third place & Bronze medal in the National level All Island Interschool Chemistry Essay Competition 2011 ( English Medium) conducted by the Royal Chemistry Society of Sri Lanka section. She wrote an essay on "The Role of chemistry for hygienic food".



The awarding ceremony was held in August 2011. I congratulate her and wish her for her future success also.

## Provincial Level English Day Competition 2011

**The Provincial Level English Day** Competition 2011 was held at Vavuniya on 22nd to 25th of Sepember 2011. Most of our students participated in the competition and we won 3 first places and 3 third places in the competition.




| | | | |
|---|---|---|---|
| 1. Ms.B.Gowshiya | Gr.7 | Recitation | 1st |
| 2. Ms.U. Sangavi | Gr.8 | Story Telling | 1st |
| 3. Mas. S.Kreedi | Gr.11 | Creative Writing | 1st |
| 4. Mas.S. Danujan | Gr. 6 | Copy Writing | 3rd |
| 5.Ms.R. Vigani | Gr.8 | Dictation | 3rd |
| 6. Role Play | Gr.10 | | 3rd |

Mas.S.Kreedi and Ms.B.Gowshiya participated in the National level English Day Competition which was held in Colombo in November 2011.

## English Day 2011



For the last two years we celebrate our English Day. This year it was held on 18th October 2011 in our school main hall at 8.30 a.m. Mr.N.Somaskandarajah (Asst. Director of Education – English , Northern Provincial Department of Education) was the chief guest. The function started with the hoisting of school flag and the national flag. After hoisting of the flags the guests were taken to the main hall with the school band. Then the chief guest



and other guests lit the oil lamp. Mr.K.Jeyaveerasingam Senior teacher of English presided over the function. Mas.S.Kreedi- the President of the English Union delivered his welcome address. After that Mr.K.Jeyaveerasingam and the Principal addressed the function. Then the Chief guest awarded the certificates for the winners in the School level English day Competition. After that the Chief guest delivered his speech. In his speech he mentioned about the importance of English and he recollected the memories of his young age. He also congratulated and praised the students who won the places in the competition. Ms.S.Priyalini –the Secretary of the English Union gave the vote of thanks. Finally the variety entertainment took place and made the function colorful. Role play, Recitation, Song by the Juniors and the Seniors, Story telling and the dabate were the main items. The function ended with the school song.

Advice is the cheapest thing that you can get free of charge

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(தேசிய பாடசாலை)

## நிறுவுநர் நாள் - 2012



நிறுவுநர் நாள் நினைவுப் பேருரையும்
கல்லூரியின் 108 ஆவது ஆண்டு மலர்
தாமோதரன் வெளியீட்டு நிகழ்வும்

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(தேசிய பாடசாலை)

## நிறுவுநர் நாள் - 2012

காலம் : 05.02.2012 ஞாயிற்றுக் கிழமை
காலை 9.0மணி

இடம் : கல்லூரி அருணாசலம் மண்டபம்

தலைவர் : திரு அ.கயிலாயபிள்ளை
(கல்லூரி முதல்வர்)

முதன்மை விருந்தினர் :
திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள்
(மாவட்ட செயலர் - யாழ்ப்பாணம்)

நிறுவுநர் நினைவுப் பேருரை
பேராசிரியர் செ.புஸ்பரட்ணம் அவர்கள்
(தலைவர் வரலாற்றுத்துறை - யாழ் பல்கலைக்கழகம்)

தாமோதரன் சஞ்சிகை வெளியீட்டுரை
திரு க.அருந்தாகரன் அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர் - தமிழ்த்துறை, யாழ் பல்லைக்கழகம்)

**தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

2012.01.05 — கல்லூரிச் சமூகம்




## கல்லூரி.. அடிப்படைத் தகவல்கள்

1. பாடசாலைப் பெயர் : யா/சாவக்சசேரி இந்துக் கல்லூரி
2. பாடசாலைத் தரம் : 1AB (தேசிய பாடசாலை)
3. தபால் விலாசம் : A9 வீதி சங்கத்தானை, சாவகச்சேரி
4. தொலைபேசி இல : 021 -2270350, 021-2270351
5. வகுப்புக்கள் : தரம் 6 - 13 வரை (கலவன்)
6. கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும்: சாவகச்சேரி வடக்க J/303
7. மின்னஞ்சல் : chavahindu@gmail.com
8. இணைய முகவரி : WWW.chc.sch.lk
9. பாடசாலை இலக்கம் (ID No) : 1003002
10. கல்லூரி ஆரம்பம் : 1904
11. நிறுவுநர் : அமரர் வி.தாமோதரம்பிள்ளை அவர்கள்
12. தேசிய பாடசாலையான தினம் : 05.02.1993
13. வருடாந்த தொகை மதிப்பு இல : 09353
14. தரம் 9 மாகாணமட்டப் பரீட்சை இல : C002
15. க.பொ.த (சா/த), (உ/த) பரீட்சை பாடசாலை இல: 11436
16. பழைய மாணவர் சங்க கணக்கு இல : 110100120000459ம.வ.சா
17. பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்கு இல : 110100140000415
18. தர உள்ளீடு கணக்கிலக்கம் : 110100180000833 ம.வ.சா
19. வசதிகள் சேவைகள் கட்டண கணக்கு இல:110100190000192
20. கணனி ஆய்வு கூட கணக்கு இலக்கம் : 110100130000699
21. ஆசிரியர் சம்பளக் கணக்கு இல: 110100170000013
22. அதிபர் பெயர் : திரு அருணாசலம் கயிலாயபிள்ளை
23. தொலைபேசி இல : 021 - 2270378
24. மின்னஞ்சல் : akailash03@gmail.com

## எமது நோக்கு



அறிவை மாத்திரம் பெற்று அறிவு மையப் பரீட்சை முறையில் உயரிய மட்டத்தில் சித்தி பெற்று, பின்னர் சமூகத்தில் செய்வதறியாது திகைக்கும் இளைஞர் யுவதிகளை எமது சமூகத்தில் இன்று தாராளமாகக் காண்கின்றோம். அறிந்து கொள்ளுதல், அறிந்தவற்றைத் தேக்கி வைத்திருத்தல், அவ்வாறு தேக்கி வைத்துள்ளவற்றுக்கு அமைவாக நடந்து கொள்ளுதல் ஆகிய மூன்று சந்தர்ப்பங்களையும் கடந்து தலையை மாத்திரம் போசிப்பதற்குப் பதிலாக அதனோடு கூடவே இதயத்தையும் கைகளையும் போசிக்கும் கல்வி முறைமையொன்றின் தேவை இன்று உணரப்பட்டுள்ளது. இந்த நோக்கத்தை அடையும் நோக்குடனேயே வெற்றிகரமாக வாழ்வதற்குத் தேவையான பொதுத் தேர்ச்சிகளை மட்டுமன்றி பாடத்தேர்ச்சிகளையும் பாடசாலைக் கல்வியின் ஊடாக விருத்தி செய்து கொள்வதற்கு வாய்ப்பளித்து தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்ட அணுகுமுறை இன்று அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

கற்றற் குறிக்கோள்கைளை அடிப்படையாகக் கொண்டு, முன்னர் நடைமுறையில் இருந்த "பாடக் குறிப்புகளுக்குப் பதிலாகத் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட செயற்பாட்டுத் திட்டங்கள்" இப்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மாணவர் ஒன்றிணைந்து ஒருவருக்கொருவர் உதவியாகத் தமது பணிகளைச் செய்யவும், பிரச்சினைகளைத் தீர்பபதற்கும் வழிவகுக்கின்ற வகையிலே வகுப்பறை ஒழுங்கமைப்பும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளும் அமைதல் அவசியமானதாகும். அறிவு, திறன்கள், மனப்பாங்குகள் பல்வேறு விதமாக ஒன்றிணைந்து மாணவரிடத்தே உருவாகும் பாடத்துடன் நேரடித் தொடர்புடைய பழக்கங்களும், அப்பாடங்களைக் கற்பதற்கு உதவியமுறைகளின் ஊடாக உருவாக்கப்படும் ஆற்றல்கள், திறன்களும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. தீர்மானங்களை எடுக்கும் திறனும் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனும் தாம் பெற்றுக் கொண்ட தேர்ச்சித் திறன்களை மற்றையவருடன் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பும் கிடைக்கின்றது. தமது உள்ளத்தில் ஒளியூட்டிக் கொள்வதன் ஊடாக உளக்களைப்பைக் குறைத்து வாழ்க்கையின் அறைகூவல்களை மகிழ்ச்சியுடன் எதிர்கொள்ளும் ஆற்றல்களையும் பெறுகின்றனர். மாணவர் இவ்வாறான எல்லாத் தேர்ச்சிகளையும் அடையும் வகையில் கற்றற் செயன்முறையை நெறிப்படுத்தும்வகையில் ஆசிரியர்கள் செயற்பாடுகளைத் திட்டமிடுவது மிகவும் அவசியமானதாகும்.

## ◆ வெளியீட்டாளர்: வெளியீட்டுக்குழு

திரு அ.கயிலாயபிள்ளை.(அதிபர்)
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)



ஆலோசனை:
திரு ந. பாலச்சந்திரன்
பிரதி அதிபர்



திருமதி செ.செல்வராஜா
பிரதி அதிபர்



திரு.த.பாலசண்முகநாதன்
உப அதிபர்



பிரதம ஆசிரியர் :
திரு க.முத்துலிங்கம்



◆ ஆசிரியர் :
திருமதி வி.மகேந்திரன்
(தமிழ்)



திருமதி தே.கமலேஸ்வரன்
(ஆங்கிலம்)



◆ கணனி வடிவமைப்பு.
திரு. ஆ.வைகுந்தன்



◆ கணனிப்பதிவு:
திருமதி க.நளாயினி



அனுசரணை: ஆசிரிய சகோதரத்துவம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி

தடம்

TO, ..............................................................

..............................................................

..............................................................

FROM , PRINCIPAL,
J/CHAVAKACHCHERI
HINDU COLLEGE
CHAVAKACHCHERI
Web.WWW.ChC.sch.lk